**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**

# மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை - 14.10.2015

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 30°செ முதல் 37°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 22°செ முதல் 27°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 18°செ முதல் 23°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் பல இடங்களில் இலேசானது முதல் மிதமான மழை காணப்பட்டது.

**வானிலை முன்னறிவிப்பு மற்றும் அறிவுரைகள் (14.10.2015 முதல் 18.10.2015)**

**1. மேற்கு மண்டலம்**

மேற்கு மாவட்டங்களான கோயமுத்தூரில் வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 71-77 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 60-64 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 12 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் நாட்களில் மழை பெற வாய்ப்பு குறைவாக இருப்பதால், மானாவாரி நிலங்களில் 20 நாட்களான மக்காச்சோளம், சோளம் மற்றும் பயறு வகை பயிர்களுக்கு களை எடுத்து கொத்தி விடவும்.
- ✓ குறைந்த வெப்பநிலையானது 23° செ ஆக இருப்பதால், சம்பா பருவத்தில் நடவு செய்த பயிர்களில் துத்தநாக குறைபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. இதைக் கட்டுப்படுத்த 0.5 சதவீதம் துத்தநாக சல்பேட்டுடன் மற்றும் 1 சதவீதம் யூரியா கலந்து 15 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்கவும்.
- ✓ அதிக காற்றின் ஈரப்பதம் மற்றும் இரவு நேர வெப்பநிலை குறைவாக இருப்பதால் திராட்சையில் சாம்பல் நோய் மற்றும் அடிச்சாம்பல் நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த 0.3 சதவீதம் நனையும் கந்தகத்தையும், அடிச்சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த 1 சதவீதம் போர்டாக்ஸ் கலவையை தெளிக்கவும்.
- ✓ தட்பவெப்ப காற்றின் ஈரப்பதம் குறீயீடானது 72 சதவீதத்தை விட அதிகமாக இருப்பதால் கால்நடைகளை சுறுசுறுப்பாக வைக்க அடிக்கடி குளிக்க வைக்கவும். கால்நடை குடில்களில் தெளிப்பானை பயன்படுத்தி குளிர்ச்சியாக வைக்கவும்.

**2. காவிரி டெல்டா மண்டலம்**

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 31°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ முதல் 26°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 63 முதல் 83 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 4 கி.மீ முதல் 10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ சம்பா நடவு செய்யும் விவசாயிகள் 1 ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம், 10 கிலோ ஜிங்சல்பேட், 30 கிலோ யூரியா, 40 கிலோ டிஏபி மற்றும் 10 கிலோ பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இடவேண்டும். சம்பா நடவிற்கு முன் ஒரு ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்புண்ணாக்கு இட்டு பூச்சி மற்றும் நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.
- ✓ சம்பா பயிர் நடவு செய்த 3 முதல் 5 நாட்களுக்குள் களை முளைப்பதற்கு முன் களைக்கொல்லிகளான பூட்டாகுளோர் 50 இ.சி 1.0 லிட்டர் 20 கிலோ மணலுடன் கலந்து சீராக தூவ வேண்டும். களைக்கொல்லி இடும் போது வயலில் 2 செ.மீ அளவிற்கு நீர் இருக்கவேண்டும். களைக்கொல்லி இட்டபின் 2 நாட்களுக்கு வயலுக்கு நீர் பாய்ச்சவோ வடிக்கவோ கூடாது.

**3. தெற்கு மண்டலம் - 1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் அதிகமான மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24$^0$செ முதல் 26$^0$செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 52 முதல் 80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 2 கி.மீ முதல் 12 கி.மீ வேகத்திலும் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால் சோளம், மக்காச்சோளம், பாசிப்பயறு, உளுந்து மற்றும் பருத்தி மானாவாரி பயிர்களை விதைப்பு செய்யவும்.
- ✓ மானாவாரி பயிர்களுக்கு களைக்கொல்லியை மணலுடன் கலந்து விதைத்த மூன்றாம் நாள் மண்ணில் போதிய அளவு ஈரம் இருக்கும்போது தெளிக்கவும்.
- ✓ வரும் தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால் மானாவாரி பயிர்களுக்கு வயலில் போதிய வடிகால் வசதி செய்யவும்.
- ✓ வரும் தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால் கரும்பு வாழை ஆகிய பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதை தவிர்க்கவும். வயலில் போதிய வடிகால் வசதி செய்யவும்.

**4. தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் தெற்கு மண்டலமான திண்டுக்கல், மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி ஆகிய மாவட்டங்களில் வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலை 26°செ முதல் 35°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 19°செ முதல் 25°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 65 முதல் 87 சதவீதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 3 கி.மீ முதல் 10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளதால் மண் மற்றும் பயிரின் வளர்ச்சியை பொறுத்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.
- ✓ மக்காச்சோளத்தில் அடிச்சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு மெட்டலாக்சைல்+ மேன்கோசெப் @ 100 கிராம் ஆகியவற்றை விதைத்த 20 ம் நாள் தெளிக்கவும்.
- ✓ கரும்பில் இரும்பு சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்ய 250 கிராம் பெரஸ் சல்பேட் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**5. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 64 முதல் 85 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 4 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை.**

- ✓ பெறுகின்ற மழையினை பயன்படுத்தி காரட் பயிரில் ஒரு ஏக்கருக்கு அடியுரமாக 78 கிலோ யூரியா, 200 கிலோ சூப்பர் பாஸ்பேட், 60 கிலோ பொட்டாஸ் கலந்து இடவும். வளர்ந்த பயிர்களுக்கு மேலுரமாக 39 கிலோ யூரியா மற்றும் 30 கிலோ பொட்டாஸ் கலந்து இடவும்.

**6.வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 32°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 23°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 72 முதல் 80 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகமானது 2 கி.மீ முதல் 5 வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ புரட்டாசி , ஐப்பசிப் பட்டத்தில் மானாவரியில் தீவனச்சோளம் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் மறுதாம்பு தீவன சோளமான கோ,எப்,எஸ்,29 தீவன சோளத்தை விதைப்பு செய்யலாம், வரிசை நடவிற்கு ஏக்கருக்கு 2கிலோ விதையும். தெளிப்பு செய்வதற்கு 4 கிலோ விதையும் தேவைப்படுகிறது, இந்த இரகம் வறட்சியினைத் தாங்கி வளர்வதுடன் பசுந்தீவனம் மற்றும் உலர்தீவனமாகவும் பயன்படுத்தலாம்.

**7. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 25°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 68 முதல் 85 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 2 கி.மீ முதல் 4 கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மானாவாரியில் மழை எதிர்பார்க்கப்படுவதால் தயார் செய்யப்பட்ட செங்காட்டில் ஓரிரு நாட்களுக்குள் நிலக்கடலை விதைப்பு செய்யவும்.
- ✓ ஆடிப்பட்டத்தில் போடப்பட்ட நிலக்கடலை பயிரை மழை ஈரத்தை பயன்படுத்தி அறுவடை செய்து அறுவடை செய்த காயை உலர்த்தவும்.
- ✓ கோழிப்பண்ணைகளில் தூய்மையான குடிநீர் அளிப்பதன் மூலம் ஈகோலை நோய்த் தாக்கத்திலிருந்து கோழிகளை பாதுகாக்கலாம்.
- ✓ காய்கறி பயிர்களின் உறுஞ்சும் பூச்சிகளின் தாக்கம் காணப்பட்டால் 5 சதவித அளவு வேப்பங் கொட்டை கரைசலை தெளிக்கவும்.

**8.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிது. பகல்நேர வெப்பநிலை $31^0$செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை $24^0$செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 76 முதல் 86 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 6 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வாழை தார்களை அறுவடை செய்யும் பொழுது மழை இருப்பதால் பாலித்தீன் கவர் (2%) பயன்படுத்தி வாழைத் தார்களை பொதிவதன் மூலம் வாழைத் தார்களின் தரத்தை அதிகரிக்கலாம்.
- ✓ அன்னாசியில் பூ பூக்கும் பருவத்தில் உள்ள கொண்டைப் பகுதியில் 20 பிபிஎம் எத்ரல் @ 50 மி.லி/செடி வீதம் ஊற்றுவதால் சீராக ஒரே நேரத்தில் பூக்கச் செய்யலாம்.
- ✓ தென்னையில் சாறு வடிதல் நோய் ஏற்பட்டுள்ளதா என்பதை கண்காணிக்கவும், நோய் ஏற்பட்டிருப்பின் பாதிக்கப்பட்ட பகுதியை செதுக்கி விட்டு 5% காலிக்ஸின் -ஐ தடவவும். காலிக்ஸின் உலர்ந்தபின் சூடான தார் -ஐ பயன்படுத்தி சாறு வடியும் பகுதியை மூடவும்.
- ✓ இஞ்சியில் மென் (கிழங்கு) அழுகல் நோய்த் தாக்குதல் தென்பட்டால் நோய் தாக்கிய கிழங்குகளை அகற்றி விட வேண்டும். நோய் பரவாமல் தடுக்க ஒரு சத போர்டோ கலவையைப் பாத்திகளில் ஊற்ற வேண்டும்.
- ✓ கோ கோ வில் மழை இருப்பதால் இரண்டாவது பருவ உரமிடுதலை தவிர்க்கவும்
- ✓ அதிக நிழலுள்ள மிளகு தோட்டங்களில் பொல்லு வண்டு தாக்குதலுக்கு வாய்ப்புள்ளது. சரியான நிழல் சீரமைப்பை மேற்கொள்வதன் மூலம் அதனைக் கட்டுப்படுத்த முடியும். பொல்லுவண்டு தாக்குதல் காணப்பட்டால் 0.05% குயினால்பாஸ் 100 லிட்டர் தண்ணீரில் 200 மிலி கலந்து தெளிக்கவும்.
- ✓ மழை இருப்பதால், அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்களை குறைந்தபட்ச ஈரப்பதம் 12% உலர்த்தியபின் உலர்வான இடங்களில் சேமித்து வைக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**

**கோவை - 3**